# இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் இல்லாது ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையின் (CEDAW) இறுதி அவதானிப்புகள் தொடர்பான  நடவடிக்கைகள்

**சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை குறித்த ஒரு நிழல் அறிக்கையை (Shadow Report), 2025 பெப்ரவரியில் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் இல்லாது ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கைக் (CEDAW) குழுவிடம் ஒன்பதாவது காலமுறை மீளாய்விற்காக சமர்ப்பித்தது.**

2022ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட அரசின் அறிக்கையில், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை அல்லது இலங்கையில் கரிசனைக்குரிய ரீதியாக அதிகரித்து வரும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட வன்முறை தொடர்பான குறிப்பிட்ட எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், இலங்கையின் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையின் (CEDAW) மீளாய்விற்கான தூதுக்குழுவின் தலைவரும், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சருமான மாண்புமிகு சரோஜா சாவித்திரி போல்ராஜ் அவர்கள் தனது தொடக்க உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> "தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்பது இலங்கை தற்போது எதிர்கொள்ளும் மற்றொரு அவசரமான சவாலாகும். டிஜிட்டல் (Digital) தளங்களின் அதிகரிப்புடன், பெண்களும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களும் துன்புறுத்தல், நிகழ்நிலைத் தொந்தரவு, நிகழ்நிலை அச்சுறுத்தல்கள் மற்றும் சுரண்டல் ஆகியவற்றிற்கு அதிகளவில் உட்படுத்தப்படுகின்றனர். இந்த வகையான வன்முறை பெரும்பாலும் பாரம்பரிய சட்டக் கட்டமைப்புகளால் கவனிக்கப்படாமலும் அல்லது போதுமான முறையில் கையாளப்படாமலும் உள்ளமையால், அவை குறிப்பாக மிகவும் தீங்கு விளைவிப்பதாகக் காணப்படுகின்றது. இத்தகைய தீங்குகளிலிருந்து தனிநபர்களைப் பாதுகாப்பதற்காக வலுவான சட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது. தனியுரிமை மீறல்கள், நிகழ்நிலைப் பின்தொடர்தல் (online stalking) மற்றும் வெறுப்புப் பேச்சு (hate speech) தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வது இதில் உள்ளடங்குகின்றது. இவை அனைத்தும் பெண்கள் மற்றும் ஏனைய பாதிக்கப்படக்கூடிய குழுக்களை சமமற்ற வகையில் அதிகமாகப் பாதிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் இணையக் குற்றங்கள் தொடர்பான சமவாயத்தை (UN Convention on Cybercrime) உருவாக்குவதற்கு வழிவகுத்த பேச்சுவார்த்தைகளில் இலங்கை ஆக்கப்பூர்வமாகப் பங்கேற்றதுடன், தொழில்நுட்பத்தின் விரைவான முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, இணையவழி ஆட்கடத்தல் மற்றும் நிகழ்நிலை பாலியல் வன்முறை போன்றவற்றை எதிர்கொள்வதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது. இப்பிரச்சினைகள் நாளுக்கு நாள் மேலும் சவாலானவையாக மாறி வருகின்றன. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாள்வதில் கவனம் செலுத்தும் இணையக் குற்றங்கள் தொடர்பான 'புடாபெஸ்ட் சமவாயத்தில்' (Budapest Convention on Cybercrime) இலங்கை ஒரு தரப்பாக உள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நிகழ்நிலைத் தளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றங்களின் அபாயகரமான அதிகரிப்பு, அவற்றின் தவறான பயன்பாட்டிலிருந்து தனிநபர்களினதும் சமூகத்தினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் நிகழ்நிலை காப்புச் சட்டம் (Online Safety Act) பொதுமுக்கியத்துவம் வாய்ந்ததாக அதிகரித்து வரும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையும், சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது."

மீளாய்வின்போது, குழுவின் பல உறுப்பினர்கள் அரசுத் தரப்பிடம் நிகழ்நிலைத் தீங்குகளிலிருந்து பெண்கள் மற்றும் சிறுமிகளைப் பாதுகாப்பதற்கும், குற்றமிழைப்பவர்களையும் நிகழ்நிலைத் தளங்களையும் பொறுப்புக்கூறச் செய்வதற்கும் 2024 ஆம் ஆண்டின் இலக்கம் 9 கொண்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டம் (Online Safety Act) மிகவும் பொருத்தமான சட்டமாக உள்ளதா என்பதையும், தொழில்நுட்ப உதவிச் சேவை வழங்குநர்கள் மற்றும் நீதித்துறையில் பணியாற்றுவோருக்கு தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையைக் (Technology-Facilitated Sexual and Gender-Based Violence) கையாள்வது தொடர்பில் பயிற்சிகளை வழங்குவதற்கு இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறித்தும் கேள்விகளை எழுப்பினர். அரசுத் தரப்பின் பதில்கள், பொதுமக்களை தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளிலிருந்து (Technology-Facilitated Sexual and Gender-Based Violence - TFSGBV) பாதுகாப்பதற்கான போதுமான நடவடிக்கையாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதையே பெரிதும் சார்ந்திருந்தன. மேலும், இவ்விடயத்தை கையாள்வதற்காக நிகழ்நிலைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, பிராந்தியப் பிரிவுகள், அத்துடன் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சிறப்புப் பிரிவுகள் உள்ளிட்ட புதிய பொறிமுறைகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

**2024-ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம்** (Online Safety Act – OSA)**, இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஊழல் மற்றும் தோல்விகளை எதிர்த்துப் போராடிய வரலாற்றுச் சிறப்புமிக்க சமூக இயக்கமான ‘‘அரகலய’ போராட்டத்தின் பின்னணியில் இயற்றப்பட்ட, மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு சட்டமாகும். நிகழ்நிலைத் துன்புறுத்தல், ஆள்மாறாட்டம், மற்றும் அந்தரங்கப் படங்களை அனுமதியின்றிப் பகிர்தல் ஆகியவற்றிலிருந்து பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கான ஒரு முக்கியக் கருவியாக இந்தச் சட்டத்தை அரசாங்கம் முன்னிறுத்திய போதிலும், அதன் செயலாக்கம் முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலைமையையே வெளிப்படுத்தியுள்ளது. மனித உரிமை அமைப்புகளும் டிஜிட்டல்** (Digital) **உரிமைகளுக்காகப் பணியாற்றும் செயற்பாட்டாளர்களும், இச்சட்டத்தின் பரந்துபட்டதும் தெளிவற்றதுமான விதிகள், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையில்** (Technology-Facilitated Sexual and Gender-Based Violence) **இருந்து தப்பிப்பிழைத்தவர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, அரசியல் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்துவோர், ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை இலக்காகக் கொண்டு பெருமளவில் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆவணப்படுத்தியுள்ளனர். நிகழ்நிலையில் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்குப் பதிலாக, நிகழ்நிலைக் காப்புச் சட்டம் அச்சத்தை ஏற்படுத்தும் சூழலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, நிகழ்நிலைக் குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கும் அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் சட்டரீதியான வழக்குத் தொடர்தலுக்கும் ஒரே நேரத்தில் அஞ்சுவதன் காரணமாக, பெண்கள்,ஓர் பாலீர்ப்புடையப் பெண், ஓர் பாலீர்ப்புடைய ஆண், இரு பாலீர்ப்புடையவர், திருநர்/மாற்றுப் பாலினத்தவர், குயர் நபர்/பால் நிலை நிச்சயப்படுத்தாதவர், அல்லது ஏனைய பலதரப்பட்ட பால்நிலை அடையாளச்** (LGBTQ+) **சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் தங்களது கருத்துகளை வெளிப்படுத்துவதில் மேலும் கடுமையான சுயக்கட்டுப்பாட்டை** (self-censorship) **மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 2025 ஆம் ஆண்டு, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம்** (Online Safety (Repeal) Bill) **தனியார் உறுப்பினர் சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஜூன் 2026-இல் நடைபெற்ற இரண்டாம் வாசிப்பின்போது இச்சட்டமூலம் எந்தவித விவாதமும் இன்றி அங்கீகரிக்கப்பட்டது; இருப்பினும், அதன் பின்னர் இச்சட்டமூலத்தை நாடாளுமன்ற நடைமுறையில் அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது தொடர்பான வேறு எந்தத் திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை.**

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கைக் குழு (CEDAW Committee) அதன் நிறைவுக் குறிப்புகளில் (Concluding Observations), பின்வரும் பரிந்துரையை முன்வைத்தது:

**28) f. நிகழ்நிலைப் பாலியல் வன்முறையைத் தடுப்பதற்கும், அதற்குப் போதிய தண்டனை வழங்கப்படுவதை உறுதி செய்வதற்குமான நடவடிக்கைகளை வலுப்படுத்துதல். மேலும், நிகழ்நிலைத் தளங்களின் சேவை வழங்குநர்களும் நிகழ்நிலை உள்ளடக்கங்களைப் பகிர்வோரும், தங்களது தளங்களில் காணப்படும் குற்றவியல் தன்மை கொண்ட உள்ளடக்கங்களைப் பற்றி புகாரளிக்கத் தவறுதல், அவற்றை நீக்கத் தவறுதல் அல்லது அவற்றைத் தடுக்கத் தவறுதல் ஆகியவற்றிற்குப் பொறுப்புக்கூறுவதை உறுதி செய்தல்.**

இந்தப்பரிந்துரையைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பங்குதார்ர்களின் கருத்துகளைப் பெறவும், இந்தப் பரிந்துரையைச் செயல்படுத்துவதற்கான செயல் நடவடிக்கைகளை அடையாளம் காணவும், சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் 2026 மே 26 அன்று கொழும்பில் பலதரப்புப் பங்குதாரர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது. இக்கலந்துரையாடலில், சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகப் புலனாய்வுப் பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், மகளீர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள், தேசிய மகளிர் உதவிச் சேவை – 1938 இல் பணியாற்றும் அலுவலர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வரும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பின்வரும் செயற்பாட்டு அம்சங்களும் பரிந்துரைகளும் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டன:

1. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (Technology-Facilitated Sexual and Gender Based Violence - TFSGBV) தொடர்பாக ஒருங்கிணைந்த, மையப்படுத்தப்பட்ட மற்றும் விரிவான சட்டம் ஒன்றை இயற்றல். தற்போதைய சட்டக் கட்டமைப்பில் இதனுடன் தொடர்புடைய பல்வேறு விதிமுறைகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் காணப்பட்டாலும், இலங்கைச் சட்டத்தில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (Technology-Facilitated Sexual and Gender Based Violence - TFSGBV) என்பதற்கான சட்டபூர்வமான வரைவிலக்கணம் தற்போது வழங்கப்படவில்லை.

2. தொழில்நுட்பம் சார்ந்த அறிவின்மை நிகழ்நிலையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (Online Gender-Based Violence - OGBV) முக்கியக் காரணமாக இருப்பதால், அனைத்துத் துறைகளிலும் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தத் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. அரசினால் தற்போது நடத்தப்படும் அனைத்து தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்களிலும் புதிய டிஜிட்டல் போக்குகளையும், உருவாகிவரும் அச்சுறுத்தல்களையும் உள்ளடக்க வேண்டும்.

4. பெரிய அளவிலான தேசிய நிகழ்ச்சிகளைச் செயல்படுத்துவது நடைமுறையில் எப்போதும் சாத்தியமாக இருக்காது என்பதால், சிறிய அளவிலான, சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தல். தனிப்பட்ட டிஜிட்டல் விழிப்புணர்வு மற்றும் நிகழ்நிலையில் பொறுப்பான நடத்தை ஆகியவற்றை ஊக்குவிப்பதில் உடனடி முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

5. இடைக்கிடையான நடத்தப்படும் விழிப்புணர்வுத் திட்டங்களை மட்டுமே சார்ந்திருக்காமல், டிஜிட்டல் (Digital) அறிவாற்றல், தேசிய பாடசாலைப் பாடத்திட்டத்தில் மற்றும் பன்முகப் பரிமாண அணுகுமுறையை (intersectional approach) ஒருங்கிணைத்தல்.

6. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் எதிர்கொள்ளும் யதார்த்தமான சூழல்கள் குறித்த புரிதலை மேம்படுத்தும் வகையில், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல்.

7. பொலிஸ் மற்றும் அவசர உதவித் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள், குறிப்பாக பெண் அதிகாரிகள் இரவு நேரப் பணியில் ஈடுபடும் சூழ்நிலைகளில், பாதிக்கப்பட்டவர்களின் முறைப்பாடுகளுக்குப் பாதுகாப்பான, விரைவான மற்றும் பாலின உணர்வுமிக்க முறையில் பதிலளிக்கக்கூடிய வகையில் வலுப்படுத்தப்பட வேண்டும்.

8. தற்போது பல பொலிஸ் நிலையங்களில் மகளீர் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பிரிவுகளில் போதுமான எண்ணிக்கையிலான பெண் அதிகாரிகள் நியமிக்கப்படாததால், பெண் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

9. தொழில்நுட்பத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துதல், பதிவுகளைப் பகிர்தல், நிகழ்நிலைத் தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் செயற்கை நுண்ணறிவின் (AI) நெறிமுறைப் பயன்பாடு ஆகியன உட்பட மனித உரிமைத் தரநிலைகளுக்கும் அமைவாக உரிமை சார்ந்த அணுகுமுறையின் மூலம் சிறந்த டிஜிட்டல்(Digital) நடைமுறைகளை ஊக்குவித்தல்.

10. தொழில்முறை, பொறுப்பான மற்றும் ஒழுக்கநெறிகளுக்கு அமைவான ஊடக அறிக்கையிடலை ஊக்குவிப்பதன் மூலம் நிறுவன மற்றும் சமூக வர்க்க அடிப்படையிலான பாரபட்சங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

11. இலத்திரனியல் ஆதாரங்களைக் கையாளுதல், தொலைபேசி உரையாடல்களை சட்டபூர்வமாகப் பதிவு செய்தல் மற்றும் அத்தகைய ஆதாரங்களை நீதிமன்ற நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கான சட்ட நடைமுறைகள் தொடர்பாக சட்ட விழிப்புணர்வு அதிகரித்தல். குறிப்பாக அரசத் துறையில் பணியாற்றும் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களிடையே இவ்விழிப்புணர்வு வலுப்படுத்தப்பட வேண்டும்.

12. பொருத்தமான சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்கள் தங்களது அடையாளத்தை வெளிப்படுத்தாமல் முறைப்பாடுகளைச் செய்யக்கூடிய வகையில் சிறப்பு ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பொறிமுறைகள் பாதிக்கப்பட்டவர்களின் தனியுரிமை, இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

13. தற்போதைய நீதித்துறை அமைப்பு ஏற்கனவே பெருமளவிலான நிலுவை வழக்குகளால் சுமையடைந்துள்ள நிலையில், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட வேண்டும். இவ்வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகளுக்கு தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான சிறப்புப் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும்.

14. நீதித்துறை மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் முன்னர் வெற்றிகரமாகப் பின்பற்றியுள்ள ஒத்துழைப்பு அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, தொழில்நுட்பம் தொடர்பான சட்டப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான நடைமுறைக்கேற்ற மற்றும் ஒருங்கிணைந்த சட்ட அமுலாக்க பொறிமுறைகளை உருவாக்குதல்.கொள்கை வகுப்பாளர்கள், புதிய சட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவது ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களுடன் ஒருங்கிணைந்த வகையில் அமைவதை உறுதிசெய்வதன் மூலம் சட்டங்களுக்கு இடையில் ஏற்படக்கூடிய மீளுருவாக்கம், முரண்பாடுகள் அல்லது ஒன்றுக்கொன்று மோதும் நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

15. சட்ட அமுலாக்கத்தை வலுப்படுத்தும் நோக்கில், நீதித்துறை, தொடர்புடைய ஒழுங்குமுறை அதிகாரசபைகள் மற்றும் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஊக்குவித்தல். அதேவேளை, சட்டங்களுக்கிடையிலான ஒத்திசைவைப் பேணுவதுடன், சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்தல்.

16. பொலிஸ் நிலையங்கள், சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் தகுந்த கல்வித் தகைமைகளும் முறையான பயிற்சியும் பெற்ற உளவளத்துணையாளர்களை நியமிக்க வேண்டும். தற்போது, பாடசாலை உளவளத்துணையாளர்கள் பெரும்பாலும் ஒழுங்கு நடவடிக்கைகளைக் கையாளும் ஆசிரியர்களாகவும் செயல்படுவதால், சிறுவர்கள் உதவி கோருவதைத் ஊக்கமிழக்கச் செய்கின்றது.

17. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை உள்ளிட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (SGBV) பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடங்களை வழங்குவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பு இல்லங்களின் எண்ணிக்கை அரசு அதிகரிக்கப்பட வேண்டும்.

18. பாதிக்கப்பட்டவர்களுக்குச் சேவைகளை வழங்கும் பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மற்றும் அவர்களுக்கு சேவைகளை வழங்கும் தொடர்புடைய அரச நிறுவனங்களின் சேவைகள் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து நடைபெறுவதை உறுதிசெய்ய, அவற்றுக்குத் போதுமான வரவு-செலவுத் திட்ட வளங்களை ஒதுக்கீடு செய்யதல்.

19. செயற்திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை மதிப்பிடவும், அரச அதிகாரிகளின் பொறுப்புடைமையை வலுப்படுத்தவும் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பால்நிலைச் சமத்துவம் சார்ந்த கணக்காய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

20. தேசிய அளவில் தலைமைத்துவத்தை வழங்கவும், அனைத்து தொடர்புடைய பங்குதாரர்களையும் முறைமையான ரீதியாக ஒன்றிணைக்கவும் வல்ல ஒரு சுயாதீனமான அமைப்பாகச் செயல்படுவதை உறுதி செய்வதன் மூலம் தேசிய மகளிர் ஆணைக்குழுவை வலுப்படுத்தல்.

21. 2023 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவி மற்றும் பாதுகாப்பளிக்கும் சட்டம் திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தல். பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசால் நடத்தப்படும் பாதுகாப்பு இல்லங்களை நிறுவுவதற்கான சட்டபூர்வ அதிகாரமும், அதற்குத் தேவையான நிதி வளங்களும் அதிகாரசபைக்கு உள்ளது.

Centre for Equality and Justice

www.cejsrilanka.org | srilanka.cej@gmail.com

/CEJ.SL /cej_srilanka /CEJ_SriLanka /@CEJSriLanka

ஜூலை 2026